# தேனி தெற்கு - வடக்கு மாவட்ட இளைஞர் அணி சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!
# துணை முதல்வர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!



சென்னை, ஜூன் 18-

காலத்திற்கேற்ற மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன் கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் கழக இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக தேனி மாவட்டத்துக்கு வருகை தந்துள்ள இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி தெற்கு மற்றும் வடக்கு மாவட்டங்களுக்கு சமூக வலைதளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் ஜி.பி. ராஜாமுன்னிலையில் நேர்காணல் செய்தார். இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன்அவர்களின் சமூக வலைதளப் பக்கங்களைப் பார்வையிட்டு அவர்கள் கொண்டு வந்திருந்த மினிட் புத்தகங்களையும் கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்து, பணி சிறக்க வாழ்த்தினார். இளைஞர் அணி நிர்வாகிகள் அஜிப் கான், செஞ்சுரி செல்வம் மற்றும் பலர் உள்ளனர்.


